தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2023) கொளத்தூரில் உள்ள கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவையொட்டி, அக்கல்லூரியில் பயிலும் 685 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி கட்டணம் ரூ.10,000/- மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை வழங்கிடும் அடையாளமாக 20 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் பி.விஜயகுமார் ரெட்டி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2023) கொளத்தூர், அகரம் மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.6.32 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

யார் மண்? யார் மக்கள்?

கலைஞர் நூற்றாண்டு நூலகம் வழி
தென் தமிழக மக்கள்
கண் திறக்க உதவி இருக்கிறார்
தமிழ்நாட்டு முதல்வர்!

மனித நேயம் உள்ளவர்களைக்
கண் மூட வைத்திருக்கிறார்
காணொலி மூலம்
மணிப்பூர் மாநில முதல்வர்!

தலைகவிழ்ந்து கிடக்கிறது
விளம்பரக் கட்டுமானத்தில்
வெளிச்சம் காட்டிய
ஊடக மோடியின் இந்திய பிம்பம்!

முழங்கிக் கொண்டிருக்கிறது
ஊடகக் காணொலியில்
முக்காடு தீக்கிய சமூக மனசாட்சி!

என் மண்! என் மக்கள்!
என்கிறார்கள்.
தமிழில் என் என்பதற்கும்
நம் என்பதற்கும்
வேறுபாடு அதிகம்!
என் என்றால் அதில்
நீ இல்லை
நீங்கள் இல்லை
நாம் இல்லை!
என் மக்கள் என்றால் அதில்
நான் இல்லை
நீங்கள் இல்லை
நமது மக்கள் இல்லை!
என் மண் என்றால்
யாரை வெளியேறச் சொல்கிறார்கள்?
என் மக்கள் என்றால்
யாரைத் துரத்த நினைக்கிறார்கள்?
இல்லையேல்
நம் மண்! நமது மக்கள்! என்று
சொல்ல முடியாமல் போனது ஏன்?
அரசமைப்புச் சட்ட முகப்புரை
We, the People Of India
என்று தானே சொல்கிறது.
நாம் என்று சொல்லும் போதுதான்
உதடுகள் கூட
ஒன்று சேர்கின்றன என்றவர்
கலைஞர்!

என் மண்! என் மக்கள்!
நடைப்பயண முழக்கமாகத்
தெரியவில்லையே!
நடக்கப் போகிற
தேர்தல் முழக்கமாகத் தெரிகிறதே!
வெற்றி பெற்றால்
இந்தியாவின் முகத்தை
எப்படி மாற்றப் போகிறோம் என்ற
தீர்மான முழக்கமாகத் தெரிகிறதே!

இவர்கள்
என் மண்! என் மக்கள்! என்று
எப்படிச் சொல்கிறார்கள்?
யார் மண்? யார் மக்கள்?
இது யாதும் ஊரே! யாவரும் கேளிர்
என்ற
கணியன் பூங்குன்றன் மண்!
'உலகம் உவப்ப' என்ற நக்கீரர்
மண்!
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
என்ற
திருவள்ளுவர் மண்!
'உலகம் யாவையும் தாமுள' என்ற
கம்பர் மண்!
என் மக்கள் என்றால்
மணிப்புரி மக்கள் யார் மக்கள்?

'ஒத்தி வைப்பதற்காகவே கூடுகிறது
ஒவ்வொரு நாளும் நாடாளுமன்றம்'
என்று
எப்போதோ எழுதியிருக்கிறார்
கலைஞர்!
மணிப்பூர்!
ஊர் என்றால்
நீர்வளமும் விவசாயமும்
நிறைந்திருக்கும் பகுதி!
உலகிலேயே மிகச் சிறந்த
'கெய்பூல் லாம்சோ' எனும்
மிதக்கும் ஏரிக்குச் சொந்த மாநிலம்!

வடக்கே நாகலாந்து
மேற்கே அசாம்
தென்மேற்கில் மிசோராம்
தெற்கேயும் கிழக்கேயும் பர்மா
இடைப்பட்ட பகுதியில்
இயற்கையின் எழிலகம்
இந்தியப் பண்பாட்டின் கருவூலம்
மாணிக்கநகர் மணிப்பூர்!

சாகா வரம் பெற்ற
'கம்பா, தொய்பி'
காதலர்களைக் கொண்டாடும்
'மொய்ரங்கு பர்பா'
காதல் காப்பிய மண்ணில்
காட்டுமிராண்டித்தன அரசியல்
லீலைகள்!

நிலவொளியில் குளிக்கும்
மணிப்பூர் மண்ணில்
கூட்டம் கூட்டமாக இரவு
நேரங்களில்
ஒரு கிராமத்திலிருந்து
மற்ற கிராமங்களுக்கு
ஆடிக்கொண்டே செல்வார்களாம்
இளைஞர்கள்!

வழியில்
ஒவ்வொரு கிராமமும் சேர்ந்து
கொள்ளுமாம்!
இப்படி
நடன ஊர்வலத்தால்
பெருமைகொண்ட
மணிப்பூரில் -
பெண்களை நிர்வாணமாக்கி
சமூதாயத்தையே
அவமானப்படுத்திய
நாகரிகத்தின் மரண ஊர்வலம்
அரங்கேறி இருக்கிறது!

அங்கே மணிப்புரி மொழிதான்
ஆட்சிமொழி
கல்விமொழி
நீதி மொழி!
இப்போது கலவர பூமி!
உடைமை இழந்து உரிமை இழந்து
சொந்த நாட்டில் அகதி வாழ்க்கை!

எந்த நேரத்திலும் கொல்லப்படலாம்
என்ற
உயிரச்சம், பசி, பட்டினி என
விரட்டும் வாழ்க்கை!

கட்டுப்படுத்த முடியாத நிலையில்
மணிப்பூர் மாநில அரசு!

நமது முதலமைச்சர் சொல்வது
போல
பாவ யாத்திரை நடத்துகிறார்கள்
இராமேசுவரத்தில்!

இராவணனைக் கொன்ற பாவம் தீர
இராமன் வழிபட்ட இடம்
இராமேசுவரமாம்!

நாகரிக மக்களின் சாபத்திற்கு
இராமநாதபுரத்தில் ஊர்வலம்
போகிறார்கள்!

இப்போதைய இந்தியா
முன்புபோல் யாத்திரைகளில்
இல்லை!
விழித்துக் கொண்டுவிட்டது!
ஆம்
யார் மண்? யார்
மக்கள்? என்று
கண் திறந்து விட்டது
மணிப்பூர்க்
கலவரம்!



ம.ரா

7-வது ஹீரோ ஆசிய ஆடவர் ஆக்கி விளையாட்டுப் போட்டிகள் வருகிற ஆகஸ்ட்-3 முதல் 12 வரை சென்னையில் நடைபெற உள்ளதை முன்னிட்டு திருவள்ளூர் தனியார் திருமண மண்டபத்தில் ஆக்கி ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை உருவாக்கி, விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பாக நடைபெற்ற 7-வது ஹீரோ ஆசிய ஆடவர் ஆக்கி விளையாட்டுப் போட்டியின் வெற்றிக் கோப்பை அறிமுக விழாவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி வெற்றிக் கோப்பையை மாவட்ட ஆட்சியர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் முன்னிலையில் அறிமுகப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினார் உடன் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், மாவட்ட எஸ்.பி பா.சீபாஸ்கல்யாண் , மாவட்ட திட்டக்குழு தலைவர் கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, மாவட்ட விளையாட்டு இளைஞர் நலன் அலுவலர் கா.பிரேம்குமார், முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கோ.சரஸ்வதி, திருவள்ளூர் நகராட்சி தலைவர் உதயமலர் பாண்டியன், துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், ஆணையர் சுரேந்திரஷா, ஆக்கி சங்கம் செயலாளர் திரை.ஜீ.தே. செல்வமணி, விளையாட்டு வீரர்-வீராங்கனைகள் மாணவ- மாணவியர்கள், ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

சீனாவில் புயலால் ரூ.493 கோடி சேதம்

பீஜிங்: ஆக.1-

சீனாவின் பல மாகாணங்களில் டொக்சூரி புயல் தாக்கும் என அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி அங்குள்ள புஜியான் மாகாண கடற்கரை அருகே புயல் கரையை கடந்தது. அப்போது பெய்த கனமழை காரணமாக அங்கு கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்த புயல் காரணமாக அங்கு 178 வீடுகள் பலத்த சேதமடைந்தன. சுமார் 6 ஆயிரம் ஹெக்டேர் பயிர்கள் நீரில் மூழ்கி நாசமடைந்தது. இதன்மூலம் அங்கு ரூ.493 கோடி அளவுக்கு சேதம் ஏற்பட்டு இருப்பதாக சீன அரசாங்கம் கணித்துள்ளது. இதற்கிடையே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 8 லட்சத்து 80 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர். இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டு உள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரைப் போல் அல்லாமல்

எதிரிக்கட்சித் தலைவரைப்போல் பழனிச்சாமி செயல்படுகிறார்!

மருத்துவத்துறையில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்ற மாநிலமாக திகழ்கிறது என்பதை விளக்கி அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!

சென்னை, ஆக.1-

அ.தி.மு.க. ஆட்சியில் அரைத்த மாவையே அரைத்தது போல் இல்லாமல் மருத்துவத் துறையில் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றும் முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியை கண்டு காழ்ப்புணர்ச்சி கொண்ட எடப்பாடிக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காட்டமான பதிலளித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியனின் பதில் வருமாறு:-

எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி.கே.பழனிசாமி எதிரிக்கட்சித் தலைவர் போல் செயல்படுகிறார். 07.05.2021 அன்று தி.மு.க. அரசு பதவியேற்கும்போது உச்சத்திலிருந்த கொரோனா எனும் கொள்ளை நோயை விரட்டி அடித்து கொரோனா எண்ணிக்கையை பூஜ்ஜியத்திற்கு கொண்டு வந்து சாதனை புரிந்துள்ள முதலமைச்சர் "வணக்கத்திற்குரிய தளபதியார்"அவர்களின் ஆட்சியின் மீது கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பீதியை கிளப்பும் வகையில் மக்கள் விரோதப் போக்கை கையாளுகிறார். டெங்கு, மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டு மக்கள் அவதியுறுகிறார்கள் என்று கூறுகிறார்.

எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்த போது, 2019-ஆம் ஆண்டு மட்டும் டெங்கு பாதிப்பு 8,527ஆக இருந்தது. அதேபோல் 2019ஆம் ஆண்டு மலேரியாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,088. இந்த ஆண்டு மலேரியாவினால் 30.07.2023 வரை 164 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் 2019-ஆம் ஆண்டு சிக்கன்குனியாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 681, இந்த ஆண்டு 30.07.2023 வரை 45 பேர் மட்டுமே சிக்கன் குனியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்களை காக்கும் பணியை செவ்வனே செய்து வரும் காரணத்தினால் தான் டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா பாதிப்பு குறைந்து, கட்டுக்குள் இருக்கிறது.

முதல்வரின் புதிய திட்டங்கள்!

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மருத்துவத்துறை எந்த ஒரு புதிய திட்டங்களையும் கொண்டு வராமல் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருந்தது. முதலமைச்சர் தளபதியார் ஆட்சியில் மக்களைத்தேடி மருத்துவம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம், இதயம் காப்போம் திட்டம், சிறுநீரக பாதுகாப்பு திட்டம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் என பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, அதன் மூலம் கோடிக்கணக்கான மக்கள் மருத்துவப் பயன் பெற்று வருகின்றனர்.

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் கடந்த 10 ஆண்டுகள் அ.தி.மு.க. அரசு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் விஜயபாஸ்கரின் விராலிமலை தொகுதி அன்னவாசல் அரசு மருத்துவமனை வளாகத்தில் சரியாக பராமரிப்பின்றி அவதியுற்ற 50 மனநல பாதிக்கப்பட்ட சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட பெண்களை காப்பாற்றுவதற்கு பழனிசாமியும் வழிகாட்டவில்லை, விஜயபாஸ்கரிடம் அவர் தொகுதியையே கடந்த 10 ஆண்டுகளாக பார்க்கவில்லை என்பதை தமிழ்நாடு மக்கள் உணராமல் இல்லை.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளுக்கும் 7 முதல் 10 முறைக்கு மேல் சுற்றுப் பயணம் மேற்கொண்டு

பார்க்காத மருத்துவமனையில்லை, ஆய்வு செய்யாத ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை என்ற நிலையில் தமிழ்நாடு மருத்துவத்துறையில் தன்னிறைவுபெற்ற மாநிலமாக திகழ்வதை பொறுத்துக் கொள்ள முடியாத பழனிசாமி வாய்புளித்தது மாங்காய் புளித்தது என்பது போல் மருந்து மாத்திரை பற்றாக்குறை என்று உளறுகிறார்.

இதேபோல் 16.10.2022 அன்று சேலம் மாவட்டத்தில் மருந்துகள் பற்றாக்குறை என்று உளறினார். அவர் உளறிய சில மணி நேரங்களிலே அவர் ஊரான சேலம் மாவட்டத்தில் உள்ள TNMSC மருந்து கிடங்கை முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி ஆய்வு மேற்கொண்டு அனைத்து மருந்துகளும் இருப்பில் உள்ளதை நிரூபித்தோம், பத்திரிக்கையாளர் சந்திப்பிலும் தெரிவித்தோம். வேண்டுமென்றால் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமி வர சொல்லுங்கள், அவருடனே கூட்டு ஆய்வு மேற்கொள்வோம் என்று கூறியதற்கு பதில் சொல்லாத எதிர்கட்சித் தலைவர் சொந்த ஊரில் நடைபெற்றதை மறந்துவிட்டு மருந்துகள் இல்லை என்றும் TNMSC என்று ஒன்று உள்ளதே என்று வினவுகிறார்.

புதியதாக 5 மருந்து கிடங்குகள்

முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் இது வரை மருந்துகிடங்குகள் அமையப்பெறாத மாவட்டங்களான தென்காசி, மயிலாடுதுறை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு ஆகிய 5 இடங்களில் புதிய மருந்து கிடங்குகள் ரூ.30 கோடி செலவில் அமைக்கப்பெற்று பயன்பாட்டிற்கு வரும் தருவாயில் உள்ளது.

தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தில் உள்ள மருந்துகள் இருப்பு எண்ணிக்கை பற்றி உதாரணத்திற்கு சில கூறுகிறேன்.

காய்ச்சல் மேலாண்மை மருந்துகளை பொறுத்தவரை,

Paracetamol Tab 500 MG இருப்புகளின் எண்ணிக்கை 24.10 கோடி, 5.9 மாதங்களுக்கான மருந்துகள் இருப்பில் உள்ளது.

Diclofenac Sodium Inj IP 25 MG இருப்புகளின் எண்ணிக்கை 24.48 இலட்சம், 4.6 மாதங்களுக்கான மருந்துகள் இருப்பில் உள்ளது.

Paracetamol Tab 650 MG இருப்புகளின் எண்ணிக்கை 2.21 கோடி, 6.7 மாதங்களுக்கான மருந்துகள் இருப்பில் உள்ளது.

தொற்றா நோய்களுக்கான ஆன்டிபயாடிக் மருந்துகளை பொறுத்தவரை,

Metronidazole Tab IP 200 MG இருப்புகளின் எண்ணிக்கை 1.66 கோடி, 2.4 மாதங்களுக்கான மருந்துகள் இருப்பில் உள்ளது.

Amoxycillin Cap IP 250 MG இருப்புகளின் எண்ணிக்கை 14.05 கோடி, 5.8 மாதங்களுக்கான மருந்துகள் இருப்பில் உள்ளது.

Doxycycline CAP IP 100 MG இருப்புகளின் எண்ணிக்கை 2.24 கோடி, 6.8 மாதங்களுக்கான மருந்துகள் இருப்பில் உள்ளது.

Erythromycin Stearate TAB IP 250 MG இருப்புகளின் எண்ணிக்கை 58.29 இலட்சம், 4.8 மாதங்களுக்கான மருந்துகள் இருப்பில் உள்ளது.

ஆக 31.07.2023 வரை தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகத்தின் மருந்து கிடங்குகளில் உள்ள மருந்துகளின் மொத்த மதிப்பு ரூ.170.82 கோடி (ரூ.170,82,98,756/-) ஆகும்.

இது பற்றியெல்லாம் அறியாது TNMSC என்று உள்ளதா என்று கேட்பதற்கு காரணம் அரசியல், தேர்தல் தோல்வி பயமாகும். முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி மக்களை கேடயமாக இருந்து காக்கும் என்பதில் எள்ளளவும் ஐயம் தேவையில்லை.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நேற்று (31.07.2023) தலைமைச் செயலகத்தில் தக்காளி விலையேற்றம் தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்தார். உடன், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் ஜகநாதன். கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் நா.சுப்பையன் ஆகியோர் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

என்.எம்.துரைசாமி
ஆகஸ்ட் 1 (2020)

தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு புழல் பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.

புழல் ஒன்றியச் செயலாளராகவும், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட பொருளாளராகவும், அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை நாரவாரிகுப்பம் பேரூராட்சி மன்றத் தலைவராகவும், மூன்று முறைமாதவரம் நகர்மன்ற உறுப்பினராகவும் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். நெல்,அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.